1 கொரிந்தியர் 6:9-10

அநியாயக்காரர் தேவனுடைய ராஷ்ஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று அறியீர்களா? வஞ்சிக்கப்படாதிருங்கள்; வேசிமார்க்கத்தாரும், விக்கிரகாராதனைக்காரரும், விபசாரக்காரரும், சுயபுணர்ச்சிக்காரரும், ஆண்புணர்ச்சிக்காரரும், திருடனும், பொருளாசைக்காரரும், வெறியரும், உதாசினரும், கொள்ளைக்காரரும் தேவனுடைய ராஷ்ஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை.

மத்தேயு 6:33

முதலாவது தேவனுடைய ராஷ்ஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்.

மத்தேயு 19:14

இயேசுவோ: சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள்; அவர்களைத் தடைபண்ணாதிருங்கள்; பரலோகராஷ்ஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது என்று சொல்லி,

1 நாளாகமம் 29:11

கர்த்தாவே, மாட்சிமையும் வல்லமையும் மகிமையும் ஷெஜயமும் மகத்துவமும் உம்முடையவைகள்; வானத்திலும் பூமியிலும் உள்ளவைகளெல்லாம் உம்முடையவைகள்; கர்த்தாவே, ராஷ்ஜ்யமும் உம்முடையது; தேவரீர், எல்லாருக்கும் தலைவராய் உயர்ந்திருக்கிறீர்.

லூக்கா 12:32

பயப்படாதே சிறுமந்தையே, உங்களுக்கு ராஷ்ஜ்யத்தைக் கொடுக்க உங்கள் பிதா பிரியமாயிருக்கிறார்.

யோவான் 3:3

இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஷ்ஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்.

மத்தேயு 4:17

அதுமுதல் இயேசு: மனந்திரும்புங்கள், பரலோகராஷஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கிக்கத் தொடங்கினார்.

எபேசியர் 2:19-20

ஆகையால், நீங்கள் இனி அந்நியரும் பரதேசிகளுமாயிராமல், பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாயிருந்து, அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறீர்கள்; அதற்கு இயேசுகிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார்;

சகரியா 14:9

அப்பொழுது கர்த்தர் பூமியின்மீதெங்கும் ராஷஜாவாயிருப்பார்; அந்நாளில் ஒரே கர்த்தர் இருப்பார், அவருடைய நாமமும் ஒன்றாயிருக்கும்.

ஏசாயா 52:7

சமாதானத்தைக் கூறி, நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவித்து, இரட்சிப்பைப் பிரசித்தப்படுத்தி: உன் தேவன் ராஷஜரிகம்பண்ணுகிறாரென்று சீயோனுக்குச் சொல்லுகிற சுவிசேஷகனுடைய பாதங்கள் மலைகளின்மேல் எவ்வளவு அழகாயிருக்கின்றன.

மத்தேயு 5:10

நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஷஜ்யம் அவர்களுடையது.

யோவான் 3:5

இயேசு பிரதியுத்தரமாக: ஒருவன் ஷஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஷஜ்யத்திலே பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்.

சங்கீதம் 24:10

யார் இந்த மகிமையின் இராஷஜா? அவர் சேனைகளின் கர்த்தரானவர்; அவரே மகிமையின் இராஷஜா. (சேலா)

மாற்கு 1:15

காலம் நிறைவேறிற்று, தேவனுடைய ராஷஜ்யம் சமீபமாயிற்று; மனந்திரும்பி, சுவிசேஷத்தை

விசுவாசியுங்கள் என்றார்.

ஏசாயா 33:22

கர்த்தர் நம்முடைய நியாயாதிபதி, கர்த்தர் நம்முடைய நியாயப்பிரமாணிகர், கர்த்தர் நம்முடைய ராஷஜா, அவர் நம்மை இரட்சிப்பார்.

லூக்கா 10:9

அவ்விடத்திலுள்ள பிணியாளிகளைச் சொஸ்தமாக்கி: தேவனுடைய ராஷஜ்யம் உங்களுக்குச் சமீபமாய் வந்திருக்கிறது என்று அவர்களுக்குச் சொல்லுங்கள்.